இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 222 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 10 – செவ்வாய்க்கிழமை 24 மார்ச் 2026 – திருச்சி ★ ★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 222 : Thiruvalluvar Year - 2057 - Panguni 10 - Tuesday 24 March 2026 - Trichy ★ ★ 8 Pages ₹ 5.00

## புதிய எதிர்காலத்தை எழுதிய முதல் கையெழுத்து!

# மகளிர் முன்னேற்றத்தில் புதிய உச்சம் தொட்ட 'விடியல் பயணம்'!

## திராவிட மாடல் 2.0 வில் இன்னும் மேன்மையடையும் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.3.2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

## இந்தியாவிற்கே மிகச்சிறந்த வழிகாட்டியாக விளங்கும் 'திராவிட மாடல்' அரசு!

# 425 நடமாடும் மருத்துவமனைகளுடன் தமிழ்நாடு முதலிடம்!

## ஒன்றிய அரசின் தேசிய சுகாதாரக் குழும மேலாண்மை தகவல்!

**புதுடெல்லி, மார்ச் 24-**

**"425 நடமாடும் மருத்துவ மனைகளுடன் நாட்டிற்கே மிகச்சிறந்த வழி காட்டியாக விளங்கும் தமிழ்நாடு சுகாதாரத்துறையில் முதலிடம் வகிக்கிறது" என்று ஒன்றிய அரசின் தேசிய சுகாதாரக் குழும மேலாண்மைத் தெரி வித்துள்ளது.**

425 நடமாடும் மருத்துவமனை களுடன் தேசிய அளவில் தமிழ்நாடு அரசு முதலிடம் பிடித்துள்ளது.

ஒரு காலத்தில் நோயாளிகள் மருத்துவமனையை தேடி பல மைல் தூரம் நடந்து சென்றார்கள். ஆனால், அந்த நிலை மாறி, மருத்துவமே மக்களைத் தேடி அவர்கள் இல்லங்க ளுக்கே செல்லும் உன்னத திட்டம் தான் 'மக்களைத் தேடி மருத்துவம்'. ஏழை, எளிய, விளிம்புநிலை மக்க ளின் உயிர்காக்கும் பொறுப்பை இந்த அரசு தனது தோள்களில் உறுதி யாகச் சுமக்கும் என கடந்த 2021ம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தைத் தொடங்கி வைத்த போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் உதிர்த்த வார்த்தைகள் இவை.

அன்று அவர் ஆற்றிய அந்த உரை, வெறும் மேடைப் பேச்சல்ல. அது தமிழ்நாட்டின் சுகாதாரக் கட்ட மைப்பை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திய மாபெரும் மக்கள் புரட்சி என்பதை, தற்போது ஒன்றிய அரசு அதிகாரப் பூர்வமாக வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் ஒட்டு மொத்த இந்தியாவிற்கும் ஆணித்தரமாக நிரூபித்துக் காட்டியுள்ளன.

இந்தியாவின் சுகாதாரக் கட்டமைப்பு குறித்து, ஒன்றிய அரசின் தேசிய சுகாதாரக் குழும மேலாண்மை தகவல் அமைப்பு, 2025ம் ஆண்டி ற்கான அதிகாரப்பூர்வ தரவுகளை சமீபத்தில் வெளி யிட்டது. அந்த தரவுக ளின்படி, இந்தியாவி லேயே அதிக அளவிலான 'நட மாடும் மருத்துவ வாகன ங்களை' இயக்கும் மாநிலங்களின் பட்டியலில், 425 வாகனங்களுடன் தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது.

**மாபெரும் இமாலய வெற்றி!**

மலைவாழ் குடியிருப்புகள், போக்குவரத்து வசதியற்ற குக்கிரா மங்கள் மற்றும் படுக்கையிலேயே முடங்கிக் கிடக்கும் முதி யோர்கள் என சமூகத்தின் விளிம்புநிலையில் உள்ள கடைக்கோடி மனித னுக்கும் தரமான மருத்துவச் சேவையைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற முதலமைச்சரின் கனவு இன்று 100% மெய்ப்பட்டுள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த நடமாடும் மருத்துவ வாகனங்களில் 31 சதவீதத்தைத் (31%) தமி ழ்நாடு மட்டுமே தனித்து இயக்கி வருவது, மாநில அரசின் மக்கள் பணிக்கு கிடைத்த மாபெரும் இமாலய வெற்றியாகும்.

அதாவது, இந்த 'நடமாடும் மருத்துவ மனைகள்' வெறும் வாக னங்கள் அல்ல. அவை மருத்துவர்கள், செவிலியர்கள், பரிசோதனைக் கருவிகள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளுடன் ஏழை எளிய மக்களின் வீடு தேடிச் செல்லும் மருத்துவர்கள். இந்த திட்டத்தின் மூலம் சாமானிய மக்கள் ஏராள நன்மைகள் அடைந்து ள்ளனர்.

முன்பு, சர்க்கரை நோய் மற்றும் ரத்த அழுத்தத்தி ற்கான மாத்திரை களை வாங்க, அன்றாடக் கூலித் தொழிலாளர்கள் தங்கள் ஒரு நாள் வேலையை விட்டுவிட்டு அரசு மருத்துவமனையில் மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டியதிருந்தது. இப்போது நடமாடும் மருத்துவக் குழு வினரே அவர்கள் வீடு தேடி வந்து மருந்துகளை வழங்குவதால், ஏழை களின் அன்றாட வருமானம்பாதிக்கப் படுவது தடுக்கப்பட்டுள்ளது.

**மக்களைத் தேடி மருத்துவ முகாம்!**

படுக்கையிலேயே முடங்கிக் கிடக்கும் முதியவர்கள், மருத்துவ மனைக்குச் செல்ல முடியாத மாற்றுத் திறனாளிகள் ஆகியோரின் இல்லங் களுக்கே சென்று பிசியோதெரபி (இயன்முறைச் சிகிச்சை) மற்றும் நோய் ஆதரவுச் சிகிச்சைகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

முறையான போக்கு வரத்து வசதி இல்லாத குக்கிராமங்கள் மற்றும் மலைப்பகுதிகளுக்கு இந்த நடமாடும் மருத்துவமனைகள் நேரடியாகச் சென்று, பொதுமக்களுக்கு ரத்தப் பரிசோதனைகள், ஈ.சி.ஜி. மற்றும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




**சென்னை, மார்ச் 24-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது, சமூக வலைதளத்தில் "மகளிர் முன்னேற்றத்தில் புதிய உயரங்களை எட்டிய 'விடியல் பயணம்' திட்டம், 'திராவிட மாடல்' 2.0வில் இன்னும் மேன்மையடை யும்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**விடியல் - பயணம்:**

புதிய எதிர்காலத்தை எழுதிய முதல் கையெழுத்து!

*DravidianModel* இல்,
விடியல் பேருந்துகள் 7,712

மார்ச் 1 வரையில்,
2021-22 - 95.86 கோடி
2022-23 - 166.53 கோடி
2023-24 - 186.35 கோடி
2024-25 - 213.94 கோடி
2025-26 - 235.14 கோடி

என மொத்தம் மேற்கொள்ளப் பட்டுள்ள விடியல் பயணங்கள் 897.82 கோடி.



**வெற்றியை பறைசாற்றும் திட்டம்!**

பாதுகாப்பான, சுதந்திர மான பயணங்களால் மகளிர் முன்னேற்றத்தில் புதிய உயரங்களை எட்டி யிருப்பதோடு, ஆண்டுக்கு ஆண்டு விடியல் பயணங்கள் தொடர்ந்து உயர்ந்துகொண்டே போவது இந்தத் திட்டத்தின் வெற்றியைப் பறை சாற்றுகிறது.

மகளிர் மட்டுமல்ல, திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோரும் இத் திட்டத்தில் பயன்பெறுகின்றனர்.

**யார் வந்தாலும் மாற்ற முடியாது!**

இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாட்டில் நாம் செயல்படுத்திய இந்தத் திட்டம், அடுத்தடுத்து எல்லா மாநிலங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கி விட்டது. யார் வந்தாலும் மாற்ற முடியாது என்ற நிலையை அடைந்திருக் கிறது.

*Dravidian Model* 2.0 வில் இந்தத் திட்டம் இன்னும் மேன்மையடையும். இது 'Stalin Statement!'

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.







தமிழ் மண்ணுரிமை காத்து, பெண்ணுரிமை பேணி, வெல்வோம் ஒன்றாக!

